# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிவிப்பு!

தஞ்சை, பிப்.14-

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. விடுத்துள்ள வேண்டு கோள் வருமாறு:-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் (15.02. 2024 வியாழக் கிழமை) நாளை காலை 10 மணியளவில், கும்ப கோணம் ராயா மஹாலில் நடைபெற உள்ளது.

அதுசமயம், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள். தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். மாநகர. ஒன்றிய.



பேரூர். மாநகர பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி தலைவர்கள். துணைத்தலைவர்கள். துணை அமைப்பாளர்கள். குறித்த நேரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பொருள்:**

மார்ச் 1. கழகத் தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா, இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு தீர்மானத்தின் விளக்க தெருமுனை கூட்டம் மற்றும் பொதுக் கூட்டம், ஒன்றிய, பேரூர் பகுதி கழக சார்பு அணி நிர்வாகிகள் நியமனம் குறித்து, 2024 நாடாளுமன்ற தேர்தல், கழக ஆக்கப்பணிகள்.

**தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்துகள் கேட்பு!**

குறிப்பு: 2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்துகள் கேட்புக் கூட்டம் 16.02.2024 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணிக்கு தஞ்சை குருதயாள் சர்மா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளதால், தாங்கள் வருகை தருவதுடன் சமூக அமைப்புகளுக்கும் தகவல் தெரிவித்து அறிக்கைத் தயாரிக்க உதவிடவும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அமுர்த.விஜயகுமார், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டலப் பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் பி.பாஸ்கர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகாரமேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயமாலதி சிவராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் 23ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு சுற்றுச் சூழல்துறை, காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில், கலைஞர் தமிழ் தங்கச் செயலாளர் த.சந்திரசேகரன் ஏற்பாட்டில் புதுக்கோட்டை நகர் மன்றத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் திராவிட கழக தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் தி.மு.க. வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை விஜயா, கவிஞர் நா.முத்துநிலவன், கவிஞர் நந்தலாலா, க.மதியழகன், எம்.லியாகத் அலி, சுப.சரவணன், கீரை.தமிழ்ராஜா, என்.ஆர்.எஸ். புராட்லா, சு.சண்முகம், க.நைனாமுகம்மது, எம்.எம்.பாலு, கவிநாடு கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# தி.மு.க. தலைமைக் கழகத் துணை மேலாளர் என்.ஜெயக்குமார் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

**சென்னை, பிப்.14-**

**தி.மு.க. தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் அவர்கள் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம். செய்தியை அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த என்.ஜெயக்குமார் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.**



கழகம் துவக்கப்பட்ட போது, தி.மு.க. தலைமைக் கழக அலுவலகமாக செயல்பட்டு வந்த சென்னை, இராயபுரம், "அறிவகத்தில்" 1970ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேறக்குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழக அலுவலகம் இயங்கி வந்த அறிவகம், அரசினர் தோட்ட சட்டமன்ற அலுவலகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் ஆகிய அலுவலகங்களில் தொடர்ந்து பணியாற்றி வந்ததுடன், கழகத் தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ண ஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்த தலைமைக் கழகத்தின் துணை மேலாளர் என்.ஜெயக்குமார் அவர்களுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (13.2.2024), காலை 6.45 மணியளவில் மறைவெய்தினார்.

மறைவு செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த என்.ஜெயக்குமார் அவர்களின் உடல்மீது மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரது உடல், சென்னை 600 035, சி.ஐ.டி.நகர், மாடல் அவுஸ் ரோடு, கதவிலக்கம் 22ல் உள்ள அவரது இல்லத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் திரளாகத் திரண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சென்னை, தியாகராயர் நகர், கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

## சென்னை ஆசிரியர்களுக்குப் பரிசு

சென்னை, பிப்.14-

ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற சென்னை பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு மேயர் திருமதி ஆர். பிரியா, நேற்று (12.02.2024) சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான இலக்கியம் சார்ந்த போட்டிகளில் பேச்சு. கட்டுரை, பாட்டு மற்றும் தனித்திறன் ஆகிய பிரிவுகளில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மற்றும் உருது மொழிகளில் தனித்தனியே நடத்தப்பட்டது.

போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு மேற்கூறிய பரிசுகள் வழங்கினார்.



மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பாசிசம் வீழட்டும்! ஜனநாயகம் வெல்லட்டும்' என தொகுதிவாரியான பிரச்சாரக் கூட்டங்கள் மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற காணொளி காட்சி கூட்டத்தை தொடர்ந்து. திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் காணொலிக் காட்சி வாயிலாக திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், சபியுல்லா, மாவட்ட பொருளாளர் குணசேகரன், மாநில அணி நிர்வாகி செந்தில், மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


